தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி: 044-29515580

ஆணை நாள் 07.05.2026

முன்னிலை

**திரு.ரா.பிரியகுமார், பி.எஸ்.சி, பி.எல்.,**

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 3178/B/2024**

திரு.என்.ஆர்.ரவிசங்கர் — மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/முதல்வர் — பொது அதிகார அமைப்பு
சி.பி.எம்.கல்லூரி,கோவை - 42.

**ஆணை**

இவ்வாணையத்தால் இன்று (07.05.2026) நடத்தப்பட்ட விசாரணைக்கு மனுதாரர் திரு.என்.ஆர்.ரவிசங்கர் அவர்கள் ஆஜராகவில்லை. மனுதாரர் 30.04.2026 தேதியிட்டு இவ்வாணையத்திற்கு மின்அஞ்சல் வாயிலாக, தான் மருத்துவமனையில் மூட்டுவலிக்கான சிகிச்சை பெற்று வருவதால், விசாரணைக்கு ஆஜராக இயலவில்லை என்று தெரிவித்துள்ளார் பொது அதிகார அமைப்பின் சார்பாக, திரு.R.திலிப், ஆசிரியர், சி.பி.எம். கல்லூரி, கோவை மாவட்டம் அவர்கள் ஆஜராகி, பொதுத் தகவல் அலுவலர் Dr.K.சிங்காரவேலு, முதல்வர், அவர்கள் விசாரணைக்கு ஆஜராக இயலவில்லை என்றும், அவர் சார்பாக தான் ஆஜராக அனுமதி வழங்குமாறு தெரிவித்து, உரிய ஒப்புதல் கடிதத்தை ஆணையத்தின் முன்பு சமர்ப்பித்தார்.

2. மனுதாரர் 04.03.2024 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 19(3)ன் கீழ் தாக்கல் செய்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில், இவ்வழக்கு இன்று (07.05.2026) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இம்மேல்முறையீடானது மனுதாரர் 11.11.2023 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)-ன் கீழ், சி.பி.எம்.கல்லூரியில் விளையாட்டு திடல்கள் இல்லை எனவும், கல்லூரியின் உடற்கல்வி இயக்குனர் முனைவர் E.பாலாஜி என்பவரை வேறு கல்லூரிக்கு பணிமாற்றம் செய்யகோருதல் சம்மந்தமாக தகவல்கள் வழங்கக்கோரி தாக்கல் செய்த மனு மற்றும் 18.01.2024 அன்று சட்டப்பிரிவு 19(1)-ன் கீழ் தாக்கல் செய்த முதல் மேல்முறையீடு ஆகியவற்றின் அடிப்படையில் ஆனதாகும்.

3. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலரின் பிரதிநிதி, மனுதாரர் சி.பி.எம்.கல்லூரியில் விளையாட்டு திடல்கள் இல்லை எனவும், கல்லூரியின் உடற்கல்வி இயக்குனர் முனைவர் E.பாலாஜி என்பவரை வேறு கல்லூரிக்கு பணிமாற்றம் செய்யவேண்டியும் மனு தாக்கல் செய்து, அம்மனு மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரத்தை தகவலாக கோரியுள்ளார் என்றும், மனுதாரர் தெரிவித்தபடி இக்கல்லூரியில் விளையாட்டுதிடல்கள் இல்லை என்பது முற்றிலும் தவறானதென்றும், மனுதாரர்

இக்கல்லூரியிலேயே கணிதவியல் துறையில் பேராசிரியராக பணிபுரிந்து ஓய்வு பெற்றவர் என்றும், இக்கல்லூரியின் உடற்கல்வி இயக்குனர் முனைவர் E.பாலாஜி என்பவர் 2012ஆம் ஆண்டு பணியில் சேர்ந்தார் என்றும், இக்கல்லூரியில் உடற்கல்வி இயக்குனராக பணி ஏற்ற பின்னர், பல பிரிவுகளில் பல்கலைக்கழகம் நடத்தும் விளையாட்டுப் போட்டிகளில் மாணவர்கள் ஆர்வமுடன் பங்கு பெற்று வருகின்றனர் என்றும், முனைவர் E.பாலாஜி என்பவர் தங்கள் கல்லூரியின் கலைவளர்மன்றத்தின் ஒருங்கிணைப்பாளராகவும், யோகாமன்றத்தின் ஒருங்கிணைப்பாளராகவும் உள்ளார் என்றும், கல்லூரியில் மாணவர் சேர்க்கையை அதிகப்படுத்தும் நோக்கில் பள்ளி மாணவ மாணவியர்களுக்கான மாவட்ட அளவிலான டேக்வாண்டோ(Taekwondo) போட்டி தங்கள் கல்லூரி வளாகத்தில் 22.02.2020 அன்று நடத்தியுள்ளார் என்றும், எனவே, அவரின் துறை சார்ந்த பணி, இக்கல்லூரி வளர்ச்சிக்கு அவரது பங்கு, இக்கல்லூரி மாணவர்களின் மனநிலை மற்றும் அவர்களை விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க வைப்பது போன்றவற்றை ஆராயும்போது அவர் தங்கள் கல்லூரி மாணவர்களுக்கு தேவை என்றும், அவரை பணிமாற்றம் செய்யவேண்டிய அவசியம் இல்லை என்றும், இதனையே தகவலாக மனுதாரருக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது என்றும் எடுத்துரைத்தார்.

4. மேலும், பொதுத் தகவல் அலுவலரின் பிரதிநிதி, மனுதாரர் இதுநாள் வரை 30-க்கும் மேற்பட்ட மனுக்களை தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள அனைத்து மனுக்களுக்கும் உரிய நாட்களுக்குள் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் தான் கோரிய மனுக்களுக்கு தகவல்களை பெற்றுக்கொண்டு, பெறப்பட்ட தகவல்கள் குறித்து மீண்டும், மீண்டும் தொடர்ந்து மனு தாக்கல் செய்து வருகின்றார் என்றார், தங்கள் கல்லூரியில் ஆட்கள் பற்றாக்குறை இருந்த நிலையிலும், மனுதாரர் கோரிய தகவல்கள் உரிய காலத்திற்குள் வழங்கப்பட்டுள்ளது என்றும், இவ்வாறு மனுதாரர் தொடர்ந்து மனுக்கள் தாக்கல் செய்வது, தங்களது அன்றாடப் பணிகள் வெகுவாக பாதிக்கப்படுவதுடன், தங்களுக்கு மிகுந்த மனஉளைச்சல் ஏற்படுகின்றது என்றும் தெரிவித்து, உரிய ஆவணங்களை ஆணையத்தின் முன்பு சமர்ப்பித்தார்.

5. பொது அதிகார அமைப்பின் சார்பாக சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் பொதுத் தகவல் அலுவலரின் பிரதிநிதி எடுத்துரைத்த வாதம் ஆகியவை பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்கண்டவாறு ஆணை பிறப்பிக்கப்படுகின்றது:-

- ***தகவல் அறியும் உரிமைச் சட்டம் ஒரு உன்னதமான சட்டம். பொது அரசாங்கத்தினுடைய செயல்பாடுகளில் பொதுமக்களுடைய நேரடி கவனமும் மற்றும் வெளிப்படைத்தன்மையும் கொண்டதாக இருக்கவேண்டுமென்றே இந்த சட்டம் உருவாக்கப்பட்டது. ஆனால், மனுதாரர் அந்தச் சட்டத்தை தவறாக பயன்படுத்தி வருகிறார் என்பதையே எடுத்துக் காட்டுகிறது.***
- ***மனுதாரர் ஒரேவிதமான தகவல்களை மீண்டும் மீண்டும் ஒரே பொது அதிகார அமைப்பிடம் தொடர்ந்து தகவல்களை கோருவது, மனுதாரர் தகவல்களை பெற்றுக் கொள்ளவேண்டுமென்ற எண்ணத்தைவிட, பொதுத் தகவல் அலுவலரை அவரது அன்றாட பணியினை மேற்கொள்ளவிடாமல், பொதுத் தகவல் அலுவலருக்கு பணிச்சுமையை ஏற்படுத்தவேண்டுமென்ற எண்ணமும், பல்வேறான மனுக்களை தாக்கல் செய்து, பொதுத் தகவல் அலுவலரை அச்சுறுத்தும் தன்மையே மேலோங்கி நிற்பதாக இவ்வாணையம் கருதுகிறது.***
- ***ஒவ்வொரு பொது அதிகார அமைப்பிலும் ஏற்கனவே ஒரு குறிப்பிட்ட பதவியில் பணியாற்றுகின்ற அலுவலரே பொதுத் தகவல் அலுவலராக***

*நியமிக்கப்படுகின்றனர். தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் வரும் மனுக்களின் மீது நடவடிக்கை எடுப்பதற்கென்றே முழுநேரமாக பொதுத் தகவல் அலுவலர்கள் நியமிக்கப்படுவதில்லை. இவ்வாறான சூழலில், மனுதாரர் ஒரே பொருள் தொடர்பாக, திரும்ப திரும்ப மனு செய்தவண்ணம் இருப்பது, பொது அதிகார அமைப்பின் செயல்பாட்டினை மேம்படுத்துவதைக்காட்டிலும், அவர்களின் அன்றாடப் பணிகளை முடக்கிவிடுகின்ற நிலையை உருவாக்கக்கூடும். இவ்வாறான சூழலில், பொதுத் தகவல் அலுவலரை மிரட்டுவதும், அச்சுறுத்துவதும், தவறான செயல் என்றும், மனுதாரர் பொது அதிகார அமைப்பின் அன்றாட அலுவல் பணிகளை பாதிக்கும் வகையிலும், பொது நலனின்றியும், இவ்வாறு தொடர்ச்சியாக பொது அதிகார அமைப்பின் பணியாளர்களை மன உளைச்சல் ஏற்படுத்தி, அதன் மூலம் தனக்கு சாதகமாக பொது அதிகார அமைப்பை செயல்படவைக்கும் சுயநலத்துடன் இச்சட்டத்தை பயன்படுத்துவதாக இவ்வாணையம் கருதுகின்றது.*

- *பொது தகவல் அலுவலர்களுக்கு இது போன்ற மனுதாரர்கள் மனு செய்து தகவல் பெற்றுக் கொண்டு, மீண்டும் தொடர்ந்து ஒரே தகவல்களை வேண்டி மறுபடியும், மறுபடியும் மனுக்களை தாக்கல் செய்வது, பொது தகவல் அலுவலர்களை தங்களது அன்றாட பணிகளை செய்ய விடாமல் தடுத்து, அவர்களுடைய வழக்கமான பணிகளிலிருந்து திசை திருப்புவதாகவும், தொடர்ந்து இது போன்று ஒரே மனுதாரரால் அளிக்கப்படும் மனுக்கள், பொதுத் தகவல் அலுவலர்களை அச்சுறுத்தும் வகையிலே அமைந்துள்ளதாகவும் இந்த ஆணையம் கருதுகிறது.*

- *எனவே, இவ்வழக்கில் பொது அதிகார அமைப்பின் சார்பாக ஆவணங்களின் அடிப்படையில் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதை இவ்வாணையம் பதிவு செய்து, மனுதாரர் இனிவரும் காலங்களில், தனக்கு தேவையான தகவல்களை மட்டும் குறிப்பிட்டுக்கோரி பெற்றுக்கொள்ளுமாறு அவருக்கு அறிவுறுத்தப்பட்டு, இவ்வழக்கு முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகின்றது.*

**ஒம்/-ரா.பிரியகுமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 3178/B/2024</u>**

**<u>பெறுநர்</u>**

பொதுத் தகவல் அலுவலர் /முதல்வர்,
சி.பி.எம்.கல்லூரி,கோவை - 42.

திரு.என்.ஆர்.ரவிசங்கர்,
எண்.2/38, ஸ்ரீ அம்பாள் நகர்,
சேரன் மாநகர்,
கோயம்புத்தூர் - 641 051.

Copy to: File
Sj/Ps- 13/05/2026